**அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி**

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மறுதரமதிப்பீட்டிலும் “ஏ” தகுதி பெற்றது)

நாள் : 28-04-2017

மஹா யோகத்தின் குருநாதர் மெய்ஞானி டாக்டர் குணாநிதி அவர்கள் தீட்சை பெற்ற திருநாளை முன்னிட்டு, காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக யோகா மையம் மற்றும் காஞ்சிபுரம் மஹாமகரிஷி அறக்கட்டளை, மஹாயோகம் இணைந்து வருகிற 1.5.2017 அன்று மாலை 4 மணியளவில் அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியியல் கல்லூரி உமையாள் அரங்கத்தில் பொது மக்கள் நலன் கருதி “முழுமையான ஆரோக்கியத்திற்கு யோகா ஒன்றே நிரந்தர தீர்வு” என்ற தலைப்பில் சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியாக, சிவகங்கை மற்றும் காரைக்குடியைச் சேர்ந்த பலதரப்பட்ட வயதுடைய நூற்றுக்கும் மேற்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் யோகாசனங்களை செய்து காட்ட இருக்கிறார்கள்.

அத்துடன் அழகப்பா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளி மாணவ மாணவியரின் யோகா செய்முறை, மாணவர்களுக்கான ஒழுக்கம் மற்றும் ஞாபக சக்தியை வளர்க்கக்கூடிய சித்தர்களின் தற்காப்புக் கலை ஜென்ஸ்கர் செய்முறை விளக்கம் போன்றவற்றோடு, பிறவியிலேயே பார்வைத் திறனிழந்த மாற்றுத்திறனாளி மாணவரின் யோகா தேசிய சாதனை – “India Book of Records” என்ற புத்தகத்தில் இடம் பெற இருக்கிறது.

இந்த நிகழ்ச்சியில், அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா. சொ. சுப்பையா அவர்கள் தலைமையேற்று உரை நிகழ்த்த உள்ளார்கள். காரைக்குடி சிக்ரி இயக்குநர் டாக்டர் விஜயமோகனன் பிள்ளை மற்றும் காரைக்குடியில் உள்ள சிறப்பு மருத்துவர்கள், மஹாமகரிஷி அறக்கட்டளை நிர்வாகி டாக்டர் தயாநிதி மற்றும் தலைமை ரிஷிகள் போன்றோர் பங்கேற்க உள்ளனர்.

பேரா. வி. பாலச்சந்திரன்
பதிவாளர் (பொ.)